Registered as a Newspaper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை: ரூபா 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    ஏப்ரல்    (11 - 04 - 1991)    வியாழக்கிழமை    ஓசை: 52

## ஆசிரியர்கள் இடமாற்றத்தில் எதேச்சாதிகாரம் இராது

(கொழும்பு)

ஆசிரியர்கள் எக்காரணம் கொண்டும் எதேச்சாதிகாரமாக இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைகளில் ஏற்படும் வெற்றிடங்களைக் கணக்கிட்டு அவ்வப் பிரகாரமே இடமாற்றம் நடைபெறும். பாடசாலைகளில் ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், காரைநகர் மோதல்களில்

# 117 ராணுவம் பலி; 188 பேர் படுகாயம்

## சிறிலங்கா பாதுகாப்பு செயலாளர் தகவல்

(கொழும்பு)

மன்னாரிலும், காரைநகரிலும் அண்மையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது நூற்றிப்பதினேழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், நூற்றியெண்பத்தெட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் அவர் பதிலளிக்கையில் காரைநகர் கடற்படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் கட்டடங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜெனரல் ரணதுங்கா மேலும் தகவல் தருகையில் காரைநகரில் இன்னும் துப்பாக்கிச் சண்டைகள் தொடர்ந்து வருவதாகவும் தெரிவித்தார். இன்னொரு செய்திக்குப் பதில் தருகையில் மன்னாரிலும் காரைநகரிலும் நடந்த மோதல்களில் நூற்றுப்பதினேழு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதுடன், நூற்றியெண்பத்தெட்டு இராணுவம் காயமடைந்ததாகவும் கூறியுள்ளார்.

வேறொரு கேள்விக்குப் பதிலளித்த ஜெனரல் ரணதுங்கா நேற்றமுன்தினம் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் ஏற்பட்ட மோதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பதினைந்து பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

### மீனவர் கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

மாலைதீவு அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட 88 சிறிலங்கா மீனவர்கள் நேற்று மாலை 4.30 மணிக்கு ஏயர் லங்கா விமானம் மூலம் கொழும்பு வந்தனர்.

முன்னதாக இவர்கள் மாலைதீவு கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு மாலைதீவு அரசாங்கத்தால் பிடித்து வைக்கப்பட்டிருந்தது வெளியுறவு அமைச்
(6ஆம் பக்கம் பார்க்க)

### பனையால் வீழ்ந்தவர் மரணம்

(செ. த. மை)

பனையில் சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் தவறிவீழ்ந்து மரணமானார்.

நேற்று முன்தினம் அல்வாய் மேற்கு மாறம்புலம் என்னும் இடத்தில் இப்பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றது.

அல்வாய்ப்பட்டையைச் சேர்ந்த மா. தெய்வேந்திரம் (37வயது) என்பவரே மரணமானவராவார். இவர் 5பிள்ளைகளுக்குத் தந்தையாவார்.

### வீரமரணம்

#### நேரு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாம் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் படுகாயமுற்ற நிலையில் கடந்த ஒன்பதாம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்த வீரவேங்கை நேரு நேற்று வீரமரணமடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேருவின் பூதவுடல் புதூர் மாவீரர் மண்டபத்தில் அன்று அஞ்சலிக்கு வைக்கப்பட்டு கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நினைவுத் தூபி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு எதிர்பாராத விபத்தில் மரணித்த கரும்புலி கப்டன் காசிறி அண்ணா, மேஜர் கபாஸ், லெப். சரவ், லெப். அக்பர் ஆகிய வீரவேங்கைகளின் நினைவுத்தூபி திறப்புவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆறுமணிக்கு திருநெல்வேலி ஆலடிச்சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## இந்தியா யோசனையை சிறிலங்கா ஏற்றதாம்

டில்லி,

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் யோசனையைச் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா ஏற்றுக் கொண்டுள்ளார் என இந்தியவானொலி நேற்று அறிவித்தது.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை — இந்திய பொருளாதாரம் குறித்த பேச்சுவார்த்தையின் போது இந்திய வெளிநாட்டுத்துறை இணை அமைச்சர் திக்விஜய் சிங் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குப் பேச்சுவார்த்தை அடிப்படையிலான தீர்வையே இந்தியா
(6 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தம் வகிக்க மலேசிய அரசு முயற்சி

கொழும்பு

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த மலேசிய அரசாங்கம் முயன்று வருவதாக இந்திய 'இந்து'ப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த மலேசிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று பலர் கேட்டிருந்ததை தொடர்ந்து கோலாலம்பூரில் இது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேசிய அரசாங்க அமைச்
(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவாரமாக காரைநகரில் குண்டுவீச்சு தொடர்கிறது

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் கடந்த ஒருவாரமாகத் தொடர்ச்சியாகக் காலையும், மாலையும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு இப்பகுதிக்கு வந்த வை-8 விமானமொன்று கடற்படை முகாமிற்கு அருகிலும், களபூமி, ஆலடி பகுதிகளிலும் தொடர்ச்சியாக நான்கு குண்டுகளை வீசிச் சென்றன.

மீண்டும் இரவு 9-15மணிக்கு வந்த விமானம் வலந்தலை வேரடிப் பகுதிகளில் நான்கு குண்டுகளை வீசின. இதே வேளை கடற்படை முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அதி
(6ஆம் பக்கம் பார்க்க)

### பிரிவுபசாரம்

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு அரசரத்தினம் பிரட் அவர்களின் பிரிவுபசாரவைபவம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றது இதில் சகல திணைக்கள, கூட்டுத்தாபனத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (அ)

### இந்தியா - சிறிலங்கா கூட்டுக்குழு அமைப்பு

(டில்லி)

சிறிலங்காவிற்கும் இந்தியாவுக்கும் இடையிலான கூட்டுக்குழு ஒன்றினை இந்த ஆண்டு இறுதிக்குள் ஏற்படுத்துவதற்கான வரைவு ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. வர்த்தகம், கலாசாரம் மற்றும் ஒத்துழைத்து செயற்படும் இடங்கள் ஆகியவை பற்றிக் கவனம் செலுத்துவதற்கு நேற்று வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் முச்குந்துபேக்கும், இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளர் பேனாட் திலகரெட்னாவுக்கும் இடையில் கடந்த திங்கட் கிழமை ஆரம்பித்த பேச்சுவார்த்தைகள் நேற்று முடிவுற்றது. எதிர்காலத்தில் இரு
(6ஆம் பக்கம் பார்க்க)

## சரவணை மேற்கில் குண்டு வீச்சு; இருவர் பலி; எட்டுப்பேர் படுகாயம்

(வேலணை)

சரவணை மேற்குப் பகுதியில் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு சிறிலங்கா அரசாங்கத்தின் விமானப்படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானம் ஒன்று அகோர குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டது. இந்தத் தாக்குதலினால் இருவர் உடல் சிதறிய நிலையில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றும் எட்டுப்பேர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இறந்தவரான திருமதி பாக்கியலெட்சுமி முத்துலிங்கம், (வயது 55) இரைந்து வீட்டிற்கு பாதுகாப்புத்தேடி ஓடி வந்த அயல் வீட்டுக்காரியும், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியகல்லூரி மாணவியுமான செல்வி பாமதி சொக்கலிங்கம் (வயது 17) என்பவருமே உடல் சிதறிய நிலையில் கொல்லப்பட்டனர்.

மற்றும் முத்துலிங்கம், (வயது 60) மு. வனிதமனி, (வயது 20) மு. கலாமணி, (வயது 23) மு. நகுலேஸ்வரன், (வயது 15) பொ. சொர்ணம்மா, (வயது 45) க. பார
(6ஆம் பக்கம் பார்க்க)

## தச்சன்தோப்பில் 4 வீடுகளில் 40 பவுண் கொள்ளை

நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பிலுள்ள நான்கு வீடுகளில் ரொக்கப்பணமுட்பட சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியுள்ள நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு பத்து மணியளவில் முத்துக்குமாரு நடராசா, தவமணி அருளானந்தம், கந்தையா இராசமலர்,
(6 ஆம் பக்கம் பார்க்க)

## சனசமூகங்கள் ஊடாக ஆயுர்வேத வைத்தியசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக ஆறு ஆயுர்வேத வைத்தியசாலைகள் திறந்துவைக்கப்படவுள்ளன என யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்துத் தட்டுப்பாட்டை நீக்க கந்தக மருந்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## நெறியாளர் சபை உறுப்பினர்

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. பொ. நடராசா, திரு. த. புண்ணியமூர்த்தி உப தலைவர் திரு. பொ. மாணிக்கவாசகர், திரு ஐ. சந்திரையா, திரு ச. வன்னியசிங்கம், திரு தி. இராஜேஸ்வரன், திருமதி தி. பத்மாவதி. (15)

## கால்நடைகளுக்கு கால்வாடல்நோய்

(வடமராட்சி)

வடமராட்சியில் கால்நடைகளுக்கு கால்வாடல் நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது இதனால் கால்நடைகள் வளர்ப்போர் மிகவும் கவலையடைந்துள்ளனர். இத்தகைய நோயினால் இதுவரை கரவெட்டியில் மட்டும் மூன்று கால்நடைகள் இறந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (18)

## கூட்டம்

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன சகல ஊழியர்களையும் வரும் சனிக்கிழமை 13 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருக்கும் தொழிற்சாலை சம்பந்தமான கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி நிர்வாக முகாமையாளர் வை. த. சிவலிங்கம் கேட்டுள்ளார்.

## சத்தியப் போரில் . . . . . .

7.00 மணிக்கு திலகமரணம் அடைந்தாலும் இந்திய சிறிலங்கா இராணுவ பொலிஸ் கெடுபிடிகளால் காலை 11 00 மணியளவில்தான் அதைவெளி உலகிற்கு அறிவிக்கமுடிந்தது.

அன்னை அவர்களின் உடலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல இந்தியப் படை முயன்றது. அன்னையை அன்னையர் முன்னணியினர் விஷமூட்டிக்கொலைப்போகின்றனர் என்று இந்தியப்படையினர் ஏற்கனவே செய்திருந்த பொய்ப்பிரசாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு உடலை அவர்களிடம் ஒப்படைக்க அன்னையர்முன்னணிமறுத்துவிட்டது.

எனவே...

சடலம் உடனடியாகப் புதைக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டதுடன், மட்டக்களப்பு முழுவதும் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்த இந்திய இராணுவம் அன்னையின் இறுதிச்சடங்கில் ஐவர் மட்டுமே கலந்துகொள்ளலாம் என்றும் உத்தரவிட்டது.

22 04-1988... அன்று கல்லடி நோக்கி ஆரப்பமாகியது.

இராணுவக் கெடுபிடிகளால் ஒரு சிலருடன் ஆரம்பித்தது இறுதி ஊர்வலம். ஆனால் தத்தம் வீட்டு வாயில்களில் காத்திருந்த பெருந்திரளான மக்கள் மெதுவாக ஊர்வலத்துடன் இணைந்து கொண்டார்கள்.

தனது மண்ணை தனதுயிரினும் மேலாக நேசித்த, உறுதிமிக்க போராட்ட உணர்வுள்ள அன்னையின் இறுதி அஞ்சலியில் பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

ஆக்கிரமிப்பிற்கு தமிழ் மக்கள் அடிபணிய மாட்டார்கள் என்ற சர்வதேச அபிப்பிராயத்தைப் பெற்று தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

தாயகவிடுதலைப் போராட்டத்துடன் இரண்டறக்கலந்துவிட்ட அன்னையர் திலகம் அன்னை பூபதிக்கு எம் சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி:

அன்னை பூபதி

நூல் வெளியீடு

விடுதலைப் புலிகள்

மக்கள் முன்னணி.

### வைத்தியர் உடன் தேவை

Holy Cross சுக நிலையத்திற்கு முழுநேரம் அல்லது பகுதிநேரம் கடமையாற்றுவதற்கு வைத்தியர் தேவை. கீழ்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

இல-147, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (B-1325)

## கமநல சேவை நிலையத்திற்கு 1 லட்சத்து 79 ஆயிரம் சேதம்

87 இல் இடம்பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கையின் போது, புத்தூர் - நவற்கிரியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் ஒருலட்சத்து 79 ஆயிரத்து 218 ரூபா 15 சதம் பெறுமதியான பொருள் சேதப்படுத்தப்பட்டும் கொள்ளை அடிக்கப்பட்டுமுள்ளன.

விவசாய இரசாயன மருந்துகளைகள், பெருமளவு விதை தானியங்கள் உரவகைகள், சேதப்படுத்தப்பட்டும், விவசாய உபகரணங்கள், தோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம், மின்சார உபகரணம், தளபாடங்கள், மருந்து தெளிகருவி, சுவர்க்கடிகாரம் ஆகியன கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (செ. த. மை.)

## மஹோற்சவம்

யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானமஹோற்சவம் இன்று மாரியம்மன் கிராம ஊர்வலத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று கொடியேற்றமும் 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் சித்திராபூரணையன்று தீர்த்தமும் இடம்பெறும்

## விநாயகர் கல்வி நிலையம்

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியில் இதுவரைகாலமும் "கெயின்ஸ்" என்ற பெயரில் இயங்கி வந்த கல்வி நிலையம் தற்போது பெயர் மாற்றம் பெற்று "விநாயகர் கல்வி நிலையம்" என இயங்குகின்றது.

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன என்பதனை அறியத்தருகின்றோம்.

- நிர்வாகி

(B/2351)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்.

(B-2353)

## அரசாங்க அறிவித்தல்

பிரதேச
சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

இக்காரியாலயத்தின் பாவனைக்கு உதவாத பொருள்கள் 16-04-91 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் இக்காரியாலயத்தில் விற்கப்படும். அப்பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் அன்று காலை 9.00 மணி முதல பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி ந. கனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்தியப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. ப. பணிமனை
யாழ்ப்பாணம்,
10-04-91.

(B/2350)

## இலட்சியம் மறையுமா?

ஓ
வீரமரணமடைந்த!
வீரர்களே,
உங்கள்
உருவங்களை
நாங்கள்
பார்க்காது
எதிரி
அழித்தது
உண்மைதான்!
ஆனால்,
உங்கள்
எண்ணங்களும்
இலட்சியங்களும்
ஆயுதங்களும்
நிசமும்
நம்மண்ணில்
நிமிர்ந்து
உலாவருவதை
ஒழித்திட
முடியுமா?

— மைம்




## 1991 - 04 - 11

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் ஆனையிறவு காவலரணில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் உலங்கு வானூர்தியின் தாக்குதலால் வீரமரணமடைந்த

**ரஞ்சித்** (வன்னியசிங்கம் பாஸ்கரன் - இந்தாவில்)

இதே சம்பவத்தில் வீரமரணமடைந்த

**கருணா** (சிவராசா - இன்னத்தானைப்படி)

1988 ஆம் ஆண்டு ஒட்டங்குளத்தில் இந்தியப் படையினரின் தாக்குதலில் வீரமரணமடைந்த

**சுனில்** (கதிரவன் - தமிழ்நாடு)

இதே ஆண்டு விநாயகபுரத்தில் இந்திய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**லெப். ரவி** (குலசேகரம் செல்வநாயகம் - முள்ளிவாய்க்கால்)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நமது விடுதலைப்போரில்
மரணங்கள் யாவும்
ஜனனங்களே...
ஒருவர் சுவட்டினை
தொடர்வது
ஆயிரம்... பல்லாயிரம்
உமது அடிச்சுவடும்
அப்படியே -
உயிர்த்து வரும்
நம்புங்கள்...
உங்கள் தாகம்
நிச்சயம் தணியும்
நீங்கள் சிந்திய ரத்தம்
வரலாற்றில்
கறைபடிந்த நிகழ்வுகளை
கழுவும் -
புனித நீர்...

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2348)

## புலவர்களது ஆக்கங்கள் சேர்க்கப்படுகிறது

(அராலி)

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம் இப்பகுதி வாழ் புலவர்களது வரலாறுகளையும் அவர்களது ஆக்கங்களையும் சேகரித்து தொகுத்து வருகிறது. இப்பகுதியில் வாழ்ந்தபுலவர்களது ஆக்கங்களை வைத்திருப்பவர்களிடமிருந்தும் அவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (20)

யாழ். நகரில் புதிதாக திறக்கவிருக்கும் தனியார் பலபொருள் விற்பனை நிலையமொன்றிற்கு கீழ்வரும் பதவிகளுக்கு

## வெற்றிடம் உண்டு

1. காசாளர் (இருபாலாரும்)
   கல்வியுடன் திறமையே விரும்பத்தக்கது.
2. விற்பனையாளர் (ஆண்)
   பலசரக்கு மொத்த, சில்லறை வியாபாரத்தில் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது.
3. ஊழியர்கள் (இருபாலாரும்)
   கல்வி உபகரணங்கள், ஆடம்பரப் பொருள்கள் குழந்தைகளுக்கான பொருள்கள் விற்பனையில் ஆர்வமுடையோர் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். திறமை, உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும் 15 4 91க்கு முன் காலை 9-00 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

க. புஸ்பராஜா
ஹோட்டல் பரடைஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/1323)

**சிந்தனைக்கு**

அடிமைத் தனத்தை அறுக்கும் ஆற்றல்
அடிமை ஒருவன் சொந்தக்
கையிலேயே உள்ளது.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 11-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2206
த.பெ.எண் 05

# நம்பிக்கை கொள்ள எதுவுமில்லை...

ஈராக் இராணுவத்தினருக்கு அஞ்சிப் பல லட்சம் குர்திஷ் இன மக்கள் அகதிகளாக ஈராக்கை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம்புகுந்துள்ளனர். பல லட்சம் பேர் மலைகளிலும் காடுகளிலும் ஓடி ஒழிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் உண்ண உணவும், குடிக்க நீரும், போர்க்க போர்வையும் இன்றி மடிந்து விடும் அவல நிலையில் உள்ளனர் என தெரிய வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக ஐ. நா. சபை தமது அதிகாரவரம்பையும் மீறி குர்திஷ் இன மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக ஈராக்கைக் கண்டனம் செய்துள்ளது. 'ஒருநாட்டின் உள்நாட்டு பிரச்சினையில் ஐ. நா. தலையிடுவதில்லை' என்ற நிலை மாறி இந்தக் கண்டனத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இதற்குப் பாதுகாப்புச் சபையின் நிரந்தர பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளில் சீனா தவிர ஏனையவை சாதகமாக வாக்களித்துள்ளன.

தற்பொழுது அதற்கும் ஒருபடி மேலேபோய் வட ஈராக்கில் குர்திஷ் இன மக்களுக்கு ஒரு பாதுகாப்பான வலயத்தை ஐ. நா மேற்பார்வையில் உருவாக்கப்பட வேண்டும் என்ற துருக்கியின் ஆலோசனையை ஐ நா பாதுகாப்புச் சபை விவாதிக்கவுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு பிரிட்டன் ஆதரவைத் தெரிவிப்பதில் முனைப்பாகவுள்ளது.

ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்சினை ஐ. நா. வின் கவனத்தை ஈர்த்தமையும், அதில் ஐ. நா. தலையிட முற்பட்டுள்ளமையும் வரவேற்கத்தக்கதும் பாராட்டப்படத்தக்கதுமாகும். ஆனால் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினை தனியாக ஈராக்கில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் பரவலாகவுள்ளது. பாலஸ்தீனத்தில் இருந்து இந்தியா, இலங்கை உட்பட உலகின் பல பாகங்களிலும் பரந்து கிடக்கின்றது.

மாறாக சிறுபான்மை இனத்தவர் ஆட்சியில் இருக்கும் நாடுகளில் பெரும்பான்மை இனத்தவர் மீதான அடக்குமுறையும் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், உலகின் பல பகுதிகளிலும் மலிந்து போய்க் கிடக்கும் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைகளில் எத்தனை பிரச்சினைகளில் எதுவரை சென்று ஐ. நா.வால பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும?

ஏனெனில் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினை ஐ. நா. சபையின் அங்கத்துவநாடுகள் பலவற்றில் உள்ளன. ஐ. நா. பாதுகாப்புச்சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளிலும் தேசிய இனங்களின் பிரச்சினைகள் உள்ளன. இந்நிலையில், ஐ நா வால் இந்தப் பிரச்சினையை தீர்த்துவைப்பது சிரமமான காரியமாக இருக்கும் தற்பொழுதுள்ள நிலையில ஈராக்கிற்கு எதிரான தீர்மானம் நிறைவேறும் ஆயினும் சோவியத் ரஷ்யாவில்தோன்றியுள்ளதேசியஇனப்பிரச்சினைகளுக்கு இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியுமா? நிரந்தர உறுப்பு நாடான சோவியத் வீட்டோ பாவிக்காமல் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்குமா?

அதே போன்று, பாலஸ்தீனத்தில் இருந்து அடித்து விரட்டப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரேலுக்குள் ஐ. நா. கண்காணிப்பில ஒரு பாதுகாப்பு வலையம் உருவாகலாமா? அதை ஐ. நா. தலைமையில் பேச்சுவார்த்தை நடப்பதையே எதிர்க்கும் இஸ்ரேல் அனுமதிக்குமா? அல்லது அதன் கூட்டாளியை அமெரிக்காதான் ஆதரிக்குமா?

அவ்வாறாயின், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' அதிகாரம் உள்ள நாடுகளையும், அவர்களின் நெருங்கிய சகாக்களையும் தவிர ஏனைய மூன்றாம் உலக நாடுகள் மீதே இவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படக் கூடியவையாக இருக்கும்.

இந்நிலையில் குர்திஷ் தொடர்பாக ஐ. நா. மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பாக உலகின் ஏனைய பகுதிகளில் அடக்கப்படும் மக்கள் நம்பிக்கைவைப்பதற்கு எதுவித ஏதுக்களும் இல்லை. அதேவேளை வீட்டோ அதிகாரம் உள்ள வல்லரசுகள் தமக்குள் சமரசம் செய்து கொள்ளப் பழகிக்கொள்வதால் அடக்கப்படும் சிறுபான்மைஇனங்கள்மேலும்அச்சம்தான்கொள்ளவேண்டும்.

# மேற்காசிய மாநாட்டில் இஸ்ரேல் கலந்து கொள்ளும்

(ஜெருசலேம்)

அமெரிக்கா தலைமையிலான மேற்காசியாவின் சமாதான மாநாட்டில் அரபு நாடுகளுடன் தானும் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது. நேற்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேக்கருடன் கூட்டாக ஜெருசலேமில் செய்தியாளர் மாநாட்டை நடத்திய இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவி இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர், வாஷிங்டனுடனான இஸ்ரேலின் இராணுவ உடன்பாட்டை சோவியத் யூனியன் எதிர்க்காது விட்டால் மேற்காசிய பிராந்திய சமாதான மாநாட்டில் சோவியத் பங்குபற்றுவதை இஸ்ரேலும் எதிர்க்காது என்றும் கூறியுள்ளார்.

## செம்மணி உப்பளம் தேடுவாரற்ற நிலையில்

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் உள்ள உப்புக் கூட்டுத்தாபன உப்பளம் தற்போது பாழடைந்த நிலைக்கு வந்துள்ளது. கடந்த பத்து மாதங்களாக அந்தப் பகுதிக்கு அங்கு பணிபுரியும் எந்த ஒரு உத்தியோகத்தரும் செல்லாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இங்கு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பத்துமாதங்களில் ஆறுமாதங்களுக்கான பணிக்கொடைகள் கொடுக்கப்பட்டதாகவும் மீதி நான்கு மாதமும் இன்னும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (லோ)

## குர்திஷ் இனத்தவருக்கு ஈராக்கில் தனிக்குடியிருப்பு; ஈராக் திட்டவட்டமாக எதிர்க்கும்

(பக்தாத்)

குர்திஷ் இனத்தவருக்கு ஐ. நா. மேற்பார்வையின் கீழ் வட ஈராக்கில் தனிக்குடியிருப்பு அமைக்கும் யோசனையை ஈராக் திட்டவட்டமாக எதிர்க்கும் எனத் தெரிவித்துள்ளது.

குர்திஷ் அகதிகள் பிரச்சினையை சமாளிக்க ஈராக்கிற்குள்ளேயே ஒரு பகுதியில் ஐ. நா. மேற்பார்வையில் குர்திஷ் இனத்தவருக்கு ஒரு பகுதியை அமைக்க, ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பு தலைவர்களின் அனுசரணையுடன் பிரிட்டன் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஒரு பிரேரணையை முன்மொழிந்தது.

இப்பிரேரணை நேற்று முன்தினம் விவாதத்திற்கு எடுக்கப்படவிருந்த வேளையில் இந்தயோசனை சர்ச்சையை ஏற்படுத்துவதாகவும், சாத்தியமான எல்லா வழியிலும் ஈராக் இதை எதிர்க்கும் என்றும், ஈராக் பிரதமர் சதூன் ஹமாதி தெரிவித்துள்ளார்.

## உணவு விநியோக சீர்படுத்த கொர்பசேவ் நடவடிக்கை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் இந்த வருட அறுவடைகளை பாதுகாக்கவும் உணவு விநியோகங்களை சீர்படுத்தவும் ஜனாதிபதி கொர்பசேவ் அவசரகால நடவடிக்கைகளுக்கு உத்தரவு இட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சி, வானொலி மூலம் கொர்பசேவின் இந்த உத்தரவுகள் அறிவிக்கப்பட்டன. விவசாயிகளுக்கு இயந்திர சாதனங்களையும் எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்களையும் போதுமான அளவு விநியோகம் செய்யுமாறும் உத்தரவு இடப்பட்டுள்ளது. வயல்களில் வேலை செய்வதற்காக மாணவர்களை ஒன்று திரட்டுவது உட்பட அதிகளவு தொழிலாளர்களைச் சேர்க்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## சமாச அலுவலகம்

(கொழும்புத்துறை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்திற்கு நிரந்தர அலுவலகம் ஒன்று சண்டிலிப்பாய் சந்திக்கருகாமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (சு)

## கிளிநொச்சியில் மலேரியா

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா நோயினால் அநேகமான மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் தொகை கடந்த வருடத்தைவிட பத்து மடங்கு அதிகரித்துள்ளது என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மாணவர் உணவு முத்திரை பெறுமதியை அதிபர்கள் அனுப்பாததனால் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் தத்தமது மாணவர்களுக்கு தம்மால் வழங்கப்பட்ட தைமாத மாணவ உணவு முத்திரைகளின் பெறுமதியை பல பாடசாலை அதிபர்கள் அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு இதுவரை அனுப்பி வைக்காத காரணத்தினால் இந்த முத்திரைகளுக்கான பொருள்களை விநியோகம் செய்யும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான கொடுப்பனவைத் தம்மால் மேற்கொள்ள முடியாதிருப்பதாக யாழ். செயலக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

யாழ் நகரிலுள்ள பிரபல பாடசாலை அதிபர்கள் இதில் அசட்டையீனமாக இருப்பது கவலைதருவதாகவும் அவர்கள் இனியாவது இவற்றை உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ச)

## நெருப்புக் காய்ச்சல் பரவுகிறது

(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் பல பாகங்களிலும் நெருப்புக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். தீவகத்தில் குறிப்பாக அல்லைப்பிட்டிப் பகுதியிலேயே இந்த நோய் அநேகமானோரைப் பீடித்துள்ளதாகவும் அல்லைப்பிட்டி சுகாதாரப் பரிசோதகர் திரு தெய்வேந்திரம் நமது நிருபரிடம் தெரிவிக்கின்றார்.

இந்த நெருப்புக்காய்ச்சல் நோய் பரவாமல் இருக்க சுகவழியை கடைப்பிடிக்கும்படியும், கொதித்து ஆறிய நீரைப் பருகும்படியும் கண்ட கண்ட இடங்களில் மலசலம் கழிக்க வேண்டாம் எனவும் சுகாதார பரிசோதகர் இப்பகுதி மக்களை எச்சரித்துள்ளார். (15)

## சேதமுற்ற பாடசாலைகளுக்கு தற்காலிகக் கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா அரசபடைகளின் தாக்குதலால் சேதமடைந்த பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இம்மாவட்டத்தில் பல பாடசாலைகள் அரசபடையினரின் குண்டுத் தாக்குதல்களால் சேதமடைந்தமையால் இப்பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கான வகுப்புக்களை நடாத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் முடியாமல் இருக்கின்றது. சில பாடசாலைகளில் இடநெருக்கடி காரணமாக பல பிரிவு வகுப்புக்களை ஒரே வகுப்பில் வைத்து வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை தடுப்பதற்காக மேற்படி தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான மதிப்பீட்டு அறிக்கையை யாழ். செயலகத்திட்டமிடல் பகுதி கல்வித் திணைக்களத்திடம் கோரியுள்ளது. (க)

## விதை தானிய விநியோகம்

யாழ்.மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் திட்டத்துக்கமைவாக தென்னிந்திய திருச்சபை கச்சான், எள்ளு, சாமி, உழுந்து, பயறு, சோளம் ஆகிய விதைதானியங்கள் வழங்கவுள்ளது. விதைதானியங்கள் தேவைப்படும் விவசாயிகள் பயிரிடத் தயாராகவுள்ளதற்கான அத்தாட்சியுடன் (உற்பத்திக்குழுக்களின் அல்லது விவசாயப் போதனாசிரியரின்) 83/2 காங்கேசன்துறைவீதி, கொக்குவில் என்ற முகவரியில் விதைதானியங்களை பெற்றுக்கொள்ளலாம்.

## ஷெல் தாக்கு

வவுனியா மாவட்டத்திலுள்ள தாண்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து கடந்த திங்கட்கிழமை இரவு எட்டுமணியில் இருந்து பத்து மணி வரை ஆட்லரி ஷெல் 50 கலிபர் தாக்குதலும் சாஸ்திரி கூழாங்குளம் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்டன.

